

லண்டன் மாநகரில், பிரிட்டன் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அயலக தமிழர் சாதனை விருது 2025& (FeBTA 2025) சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் அயலக வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் , ஐக்கிய இராஜ்ஜியம் (U.K.) நாட்டின் சமூக பாதுகாப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அமைச்சர் சர் ஸ்டீஃபன் டிம்ஸ் ஆகியோர் பங்கேற்று விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றி தமிழ்நாடு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் தொடங்கப்பட்ட அயலக தமிழர் நல அடையாள அட்டைகளை உறுப்பினர்களுக்கு வழங்கினார்கள் உடன் ஐக்கிய இராஜ்ஜியம் (U.K.) நாட்டின் திமுக அயலக அணி அமைப்பாளர் செந்தில், துரை கண்ணன், விஜய் பார்த்திபன், நவீன் ராமர், கழக மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு உள்ளிட்டோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் பலத்த காற்றின் காரணமாக மரம் விழுந்து கேரள மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுலா பயணி செல்வன் ஆதிதேவ் என்பவர் எதிர்பாரா விதமாக உயிரிழந்ததை தொடர்ந்து, உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்த சுற்றுலாப் பயணியின் உடலுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினார். உடன் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம். ராஜ், கண்காணிப்பு அலுவலர் / துணிநூல் துறை இயக்குநர் திருமதி லலிதா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி உட்பட பலர் உள்ளனர்.

### உலகம் முழுவதும் வாழும்

# தமிழர்களை தாய்போல் காத்துவருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## லண்டனில் நடைபெற்ற அயலகத் தமிழர்கள் விழாவில் –அமைச்சர் சா.மு.சாசர் பெருமிதம்!

**லண்டன், மே 27 -**

**"தமிழ்நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களையும் காக்கின்றவகையில், தாய்போல் அக்கறை கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்! என்று லண்டன் மாநகரில் நடைபெற்ற அயலக சாதனை தமிழர்கள் 2025 விருது விழாவில் அமைச்சர் ஆவடி சா மு .நாசர் பெருமிதத்துடன் கூறினார்.**

இவ்விழாவில் அமைச்சர் சா.மு.நாசர் பேசியதாவது:-

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கனியன் பூங்குன்றனாரின் பொன்மொழிக்கேற்ப,

பன்னெடுங்காலந்தொட்டு தமிழர்கள் கல்வி, வணிகம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்பினைத் தேடியும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து வருகின்றனர். அவ்வாறு, புலம்பெயர்ந்த அயலகத் தமிழர்களின் நலன்களைப் பேணி பாதுகாத்திட தமிழ்நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களையும் காக்கின்றவகையில், நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் கடந்த 2021 ஆண்டு உருவாக்கப்பட்டதுதான் "அயலக தமிழர் நல வாரியம்" உலகெங்கும் இருக்கின்ற தமிழர் அமைப்புகளை அங்கிகரித்து, ஒருங்கிணைத்து உலகத்தமிழர்களை ஒரு குடையின் கீழ்கொண்டு வந்து சாதனை படைத்திருக்கிறது.

நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அயலக தமிழர்கள் நலனில் தாய்போல் அக்கறை கொண்டு செயல்படுத்து கின்ற திட்டங்கள் ஒன்றல்ல இரண்டல்ல அது எண்ணற்ற திட்டங்களாய் எல்லையற்று நீள்கிறது, உலகெங்கும் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்க "அயலக தமிழர் தினம்" கொண்டாடுதல், அயலக தமிழர்களின் குழந்தைகளுக்கு நம் தாய் மொழியாம் தமிழ் மொழியை கற்பித்தல்' அயலக தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ் கலைகளை கற்பித்தல் திட்டம், அயலகத் தமிழர் வாரிசுகளில் ஒவ்வொரு ஆண்டும் 200 இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களை தமிழகம் அழைத்துவரும் "வேர்களை தேடி" திட்டம், அயலகத் தமிழர்களின் வரலாற்றை பதிவு செய்ய 'தமிழர் தடம்' திட்டம், என நமது தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகின்ற இலட்சிய திட்டங்களுக்கு உலக தமிழர்கள் சார்பாக எனது சிரம் தாழ்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். தமிழகத்தில் இருந்து சுமார் 30 இலட்சம் நபர்கள் புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வசித்து வருகின்றனர்.

**இங்கிலாந்தில் 61,000 தமிழர்கள்!**

இங்கே இங்கிலாந்து (U.K) நாட்டில் மட்டும் சுமார் 61,000 தமிழர்கள் வசித்து வருகின்றார்கள், அயலகத் தமிழர்கள் மூலம் இந்தியாவிற்கு வரும் அன்னியச் செலாவணி வரவு சுமார் ரூ 61,843 கோடிகள் ஆகும், மேலும் அயலக தமிழர் நலத்துறை, அயலகம் சென்று மருத்துவ இயலாமையால் துன்புறும் தமிழர்களை தாயகம் மீட்டு வருதல். இறப்பவர்களின் உடல்களை தாயகம் கொண்டு வருதல். வெளிநாடுகளில் பணிசெய்யும் நிறுவனங்களுடனான சச்சரவுகளில் தமிழர்களுக்கு உதவுவது உள்ளிட்டவற்றை செய்து வருகிறது. இதன் உரிய நடவடிக்கைகளுக்காக, ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் மற்றும் அதன் தொடர்புடைய இந்திய தூதரகங்களையும் நாடுவது உண்டு.

மேலும் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு இன்னலுருபவர்களை அழைத்து வரவும், அங்கு இறக்கும் தமிழர்களின் உடல்களை இந்தியா கொண்டு வரவும் தமிழக அரசால் ரூ.1 கோடி சுழல்நிதி வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் இருந்து வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களுக்கு சென்று அங்கு எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய பிரச்சனைகளின் காரணமாக சிக்கி தவித்த சுமார் 2494 தமிழர்கள் இதுவரை தாயகம் மீட்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகளுக்கு பணி நிமித்தம் சென்று காலமாகிவிட்ட 1237 தமிழர்களின் உடல்களை தாயகம் கொண்டுவந்து அவர்களின் குடும்பத் தாரிடம் ஒப்படைத்துள்ளோம்,

**29 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை!**

மேலும் 15.05.2024 முதல், தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் அயலக தமிழர் நல அடையாள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தபடுகிறது, இது வரை 29 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அயலக தமிழர்கள் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ளனர். அயலகத் தமிழர் அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு,

- விபத்து மரணத்திற்கு ரூ. 10 இலட்சம் மற்றும் நிரந்தர இயலாமை/உடற்குறைபாட்டிற்கு ரூ.5 இலட்சம் வழங்கபடுகிறது.
- மருத்துவ செலவிற்காக ரூ. 1 லட்சம் வரை வழங்கபடு கிறது.
- அயல்நாடுகளில் இறக்கும் குறைந்த வருவாய் கொண்ட தமிழர்களின் குடும்பங்களு க்கான கல்வி உதவித்தொகை,
- அயல்நாடுகளில் இறக்கும் குறைந்த வருவாய் கொண்ட தமிழர்களின் குடும்பங்க ளுக்கான ரூ. 20,000/ திருமண உதவித் தொகை,

அயல்நாடுகளில் இறக்கும் குறைந்த வருவாய் கொண்ட தமிழர்களின் குடும்பங்களு க்கான ரூ.1,000/ ஓய்வூதியம்,

அயலகத் தமிழர்களுக்கான கட்டணமில்லா 24 மணிநேர தொலைபேசி வசதி, (தொலைபேசி எண் +91 80 6900 9900)

அயலகத் தமிழர்களுக்கான சட்ட உதவி மையம், என பல்வேறு திட்டங்கள் தமிழக முதல்வர் அவர்



களின் திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தபடுகிறது,

"இந்த ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி கொண்டாடப்பட்ட அயகலத் தமிழர் தினத்தில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு உலக தமிழர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து வாழ்த்தி வழியனுப்பிவைத்தனர்.

**இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள்!**

இலங்கை தமிழர்களுக்கு திட்டங்கள் கடந்த 20242025ஆம் நிதி ஆண்டில் 6 கோடியே, 13 இலட்சத்து, 69 ஆயிரத்து 924 ரூபாய் செலவில் முகாம்களில் வசிக்கும் 19,551 இலங்கை தமிழர்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல 20232024 ஆம் நிதி ஆண்டில் 19,498 குடும்பங்களுக்கு 2 கோடியே, 50 இலட்சத்து, 54 ஆயிரத்து, 930 ரூபாய் செலவில் பயன்பாட்டிற்குரிய பாத்திரங்களை வழங்கி நம் சகோதரர்களுக்கு நம்பிக்கை கொடுத்தது நம்முடைய திராவிட மாடல் அரசு.

அதுமட்டும் போதாது என்று நினைத்த நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2024 2025 ஆம் நிதி ஆண்டில் 15,896 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு தலா 5 இலவச எரிவாயு உருளைக்கான மானியத் தொகை 3 கோடியே, 17 லட்சத்து, 92 ஆயிரம் ரூபாய் வழங்கி அவர்களுக்கு ஒரு ஊக்க சக்தியாக விளங்குகின்றார் என்பதனை இங்கே பதிவு செய்கின்றேன்.

மேலும் 20232024ஆம் நிதியாண்டில் முகாம்களில் வாழ்கின்ற 1944 இலங்கை தமிழ் மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை 3 கோடியே, 76 லட்சத்து, 5 ஆயிரத்து 365 ரூபாய் வழங்கியுள்ளது நமது திராவிட மாடல் அரசு. அவர்கள் மீது மேலும் அன்பு கொண்டு முகாம்களில் வசிக்கின்ற 200 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் வீதம் ரூபாய் 2 கோடியே 50 இலட்சத்தினை வழங்கியுள்ளது நம்முடைய அரசு. இலங்கை தமிழர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்:

முகாம்களில் வசிக்கின்ற இலங்கை தமிழர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் 176 கோடி ரூபாய் செலவில் 3510 வீடுகள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில் 2757 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைத்து சாதனை படைத்துள்ளது நமது அரசு.

மேலும், 753 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்க தயார் நிலையிலும் இந்த அரசு வைத்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் இரண்டாம் கட்டமாக 228 கோடியே, 64 இலட்சத்து, 49 ஆயிரம் ரூபாய் செலவில் 3,959 வீடுகள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில் 236 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் தொடர்சியாக நடப்பு நிதியாண்டில் மூன்றாம் கட்டமாக 3000 வீடுகள் கட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அதனையும் செயல்படுத்தி முடிக்க தயார்நிலையில் உள்ளது இந்த திராவிட மாடல் அரசு.

நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்கின்ற நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கான வழிகாட்டுதலால் இவையெல்லாம் சாத்தியப்பட்டு இருக்கின்றன என்பதனை அழுத்தம் திருத்தமாக இங்கே நான் பதிவு செய்கிறேன்.

நம்முடைய செயல்பாடுகளை எல்லாம் மிகுந்த கவனத்துடன் கூர்ந்து நோக்கி உரிய வழிகாட்டுதலை நமது நம்பிக்கை நட்சத்திரம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் வழங்கி வருகின்றார்கள் என்பதனையும் நான் நன்றி பெருக்கோடு தெரிவிக்க கடமைபட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.மு. நாசர் உரையாற்றினார்.

### வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு நலத்திட்டங்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கது!

## லண்டனில் நடைபெற்ற அயலகத் தமிழர்கள் விருது விழாவில் இங்கிலாந்து அமைச்சர் சர்ஸ்டீபன்டிம்ஸ் புகழாரம்!

**லண்டன், மே 27**

**"உலகளாவிய அளவில் தமிழ் மக்களின் நலனில் அக்கறையோடு செயல்படும் தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பாராட்டுகள் என இங்கிலாந்து நாட்டின் சமூக பாதுகாப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறை அமைச்சர் சர் ஸ்டீபன் டிம்ஸ் புகழாரம்" சூட்டி யுள்ளார்.**

ஐக்கிய இராச்சியம், கிழக்கு ஹாம் நகரில் நடைபெற்ற "அயலக தமிழர் சாதனை விருது 2025 விழாவில்,

ஐக்கிய இராச்சியத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறை அமைச்சர் சர் ஸ்டீபன் டிம்ஸ் மற்றும் தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்,

தமிழர்கள் அதிக அளவில் வாழும் மையப்பகுதியான இங்கிலாந்து நாட்டின், ஈஸ்ட் ஹாமில் நடைபெற்ற இந்த விழாவில், சர் ஸ்டீபன் டிம்ஸ் அவர்கள் தனது சிறப்புரையில், தமிழ்நாடு அரசு மற்றும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சர் ஸ்டீபன் டிம்ஸ் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தார். உலகளாவிய அளவில் வாழும் தமிழ் மக்களின் மேம்பாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் திட்டங்களையும் வியந்து பாராட்டு தெரிவித்த அவர், இங்கிலாந்து மற்றும் இந்தியாவின் தமிழ்நாடு இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் தமிழக அரசின் குறிப்பிடத்தக்க பங்கையும் பாராட்டினார்.

இங்கிலாந்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களின் நலனை மேம்படுத்துவதில் முதலமைச்சரின் தொடர்ச்சியான முயற்சிகளை அவர் இந்நிகழ்ச்சியில் எடுத்துரைத்தார்.



குறிப்பாக "தமிழகத்தில் குடியேறிய இலங்கைத் தமிழர்களுக்கு நலத்திட்டங்களைத் தொடங்குவதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கது எனவும், அவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுவசதித் திட்டங்களும் சமூகப் பாதுகாப்பு சலுகைகளும் தமிழ்நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான ஆழ்ந்த அர்ப்ப ணிப்பை பிரதிபலிக்கின்றன, என்று சர் டிம்ஸ் குறிப்பி ட்டார்.

**புதுமையான முயற்சி!**

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அயலக தமிழர் வாரிய அடையாள அட்டை மற்றும் காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற புதுமையான முயற்சிகளையும் அவர் பாராட்டினார். "இந்தத் திட்டங்கள் உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்கு நம்பிக்கையும், பாதுகாப்பையும் வழங்குகின்றன, மேலும் தமிழர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் தமிழர்களின் கலாச்சார அடையாளத்தை வலுப்படுத்துகின்றன, என்றும் அவர் கூறினார்.

மேலும் அயலக தமிழர் வாரிய அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் பயன்களான விபத்து மரணத்திற்கு ரூ. 10 இலட்சம் மற்றும் நிரந்தர இயலாமை / உடற்குறைபாட்டிற்கு ரூ.5 இலட்சம், மருத்துவ செலவிற்காக ரூ. 1 லட்சம், அயல்நாடுகளில் இறக்கும் குறைந்த வருவாய் கொண்ட தமிழர்களின் குடும்பங்களுக்கான கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, தமிழர்களின் குடும்பங்களுக்கான ரூ.1,000/ ஓய்வூதியம், அயலகத் தமிழர்களுக்கான கட்டணமில்லா 24 மணி நேர தொலைபேசி வசதி, மற்றும் சட்ட உதவி மையம், என பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டு பாராட்டினார்,

மேலும் கல்வி மற்றும் தொழில்முனைவு முதல் பொது சேவை மற்றும் கலாச்சாரம் வரை பல்வேறு துறைகளில் தமிழர்களின் குறிப்பிட த்தக்க பங்களிப்புகளுக்காக இங்கிலாந்தில் உள்ள தமிழ் சமூகத்தைப் சர் ஸ்டீபன் டிம்ஸ் பாராட்டினார். இதுபோன்ற உலகளாவிய சாதனைகளை அங்கீகரித்து ஊக்குவிப்பதில் 'அயலக தமிழர் சாதனை விருது 2025' போன்ற நிகழ்வுகளின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் சா.மு நாசர் , ஐக்கிய இராஜ்ஜியம் (U.K.) நாட்டின் திமுக அயலக அணி அமைப்பாளர் செந்தில், துரை கண்ணன், விஜய் பார்த்திபன், நவீன் ராமர், கழக மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி பற்றி -

# உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதா?

## ஊடகங்களுக்கு – தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!

*சென்னை, மே 27 -*

*'சில' ஊடகங்கள் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு தி.மு.க. - காங்கிரஸ் இடையே குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*23.05.2025 அன்று வெளியான மாலைமலர் நாளிதழில், "திமுக உடன் கூட்டணி காரணமாகவே காங்கிரஸின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது" நான் கூறியதாக செய்தி வெளியாகியுள்ளது.*



*இத்தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். கடந்த மூன்று நாட்களாக திருச்செந்தூர், திருநெல்வேலி, திண்டுக்கல், திருவாரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொண்டு, இந்தியா கூட்டணியின் மதச்சார்பற்ற கொள்கைகளைப் பற்றியும், தலைவர் ராகுல்காந்தியும் முதல்வர் ஸ்டாலினும் எவ்வாறு திறமையாக இந்த கூட்டணியை வழிநடத்தி செல்கிறார்கள் என்பதை பற்றியும் உரையாற்றினேன்.*

*ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. போன்ற அமைப்புகள், தங்களது சித்தாந்த அடிப்படையில் மக்களிடையே பிளவு ஏற்படுத்துகின்றன. இதனால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படாது என்பதை வலியுறுத்தியும் பேசினேன்.*

*இத்தகைய நேர்மையான முயற்சிகளுக்கு மாறாக, சில ஊடகங்கள் காங்கிரஸ் திமுக கூட்டணியை களைய விரும்பும் நோக்கத்தில் தவறான செய்திகளை எழுதி வருகின்றன. "திருமாவளவன் கூட்டணியில் நீடிக்கமாட்டார்", "அழகிரி கூட்டணிக்கு எதிராக பேசுகிறார்" போன்ற உண்மையற்ற செய்திகளை பரப்பி, கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர்.*

*இத்தகைய தகவல்கள் சில மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் உந்துதலால் , அரசியல் உள்நோக்கம் கொண்டவர்களால் வெளிப்படுகின்றன இது பத்திரிகைத் தர்மத்திற்கு முற்றிலும் எதிரானது என்பதை அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்*

*இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, முன்னாள் அமைச்சர், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர், அரசினர் விருந்தினர் மாளிகையில் தென்மேற்கு பருவமழை தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் கிராந்திகுமார் பாடி, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.மோ.ஷர்மிளா, துணை மேயர் இரா.வெற்றிசெல்வன் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் கரைப்புதூர் பகுதி சாய அலையில் விசவாயு தாக்கி பலியான திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்திற்குட்பட்ட முருகம்பாளையம் சுன்டமேடு பகுதியைச் சேர்ந்த 3 இளைஞர்களின் இல்லங்களுக்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் நேரில் சென்று ஆறுதல் கூறினார். இதில் பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜ் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.